# ஜனவரி – 16 – புதன்

**புனித யோசப் வாஸ்**

**“பல்வேறு பிணிகளால் வருந்திய பலரை அவர் குணப்படுத்தினார்” மாற்.1:34**

## முதல் வாசகம் : எசாயா 52 : 7 – 10
## (வாசகம் வேறுபடலாம்)

நற்செய்தியை அறிவிக்கவும், நல்வாழ்வைப் பலப்படுத்தவும் நலம் தரும் செய்தியை உரைக்கவும், விடுதலையைப் பறைசாற்றவும், சீயோனை நோக்கி, ”உன்கடவுள் அரசாளுகின்றார்” என்று கூறவும் வருவோனின் பாதங்கள் மலைகள்மேல் எத்துணை அழகாய் இருக்கின்றன! இதோ, உன் சாமக்காவலர் குரல் எழுப்புகின்றனர் அவர்கள் அக்களித்து ஒருங்கே ஆரவாரம் செய்கின்றனர் ஆண்டவர் சீயோனுக்குத் திரும்பி வருவதை அவர்கள் தம் கண்களாலேயே காண்பர். எருசலேமின் பாழ் இடங்களே, ஒருங்கே ஆர்ப்பரித்துப் பாடுங்கள் ஆண்டவர் தம் மக்களுக்கு ஆறுதல் அளித்துள்ளார் எருசலேமுக்கு மீட்பு வழங்கியுள்ளார். பிறஇனத்தார் அனைவரின் கண்களும் காண ஆண்டவர் தம் தூய புயத்தினைத் திறந்து காட்டியுள்ளார் மண்ணுலகின் எல்லைகள் யாவும் நம் கடவுள் அளிக்கும் மீட்பைக் காணும்.

**பதில்பாடல் :** உலகெங்கும் வாழ்வோரே ஆண்டவரைப்
போற்றிப் புகழ்ந்து பாடுங்கள்

## நற்செய்தி : மாற்கு 16 : 15 – 20

இயேசு அவர்களை நோக்கி, ”உலகெங்கும் சென்று படைப்பிற் கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள். நம்பிக்கைகொண்டு திருமுழுக்குப் பெறுவோர் மீட்புப் பெறுவர் நம்பிக்கையற்றவரோ தண்டனைத் தீர்ப்புப் பெறுவர். நம்பிக்கை கொண்டோர் பின்வரும் அரும் அடையாளங்களைச் செய்வர் அவர்கள் என் பெயரால் பேய்களை ஓட்டுவர் புதிய மொழிகளைப் பேசுவர் பாம்புகளைத் தம் கையால் பிடிப்பர். கொல்லும் நஞ்சைக் குடித்தாலும் அது அவர்களுக்குத் தீங்கு இழைக்காது. அவர்கள் உடல் நலமற்றோர் மீது கைகளை வைக்க, அவர்கள் குணமடைவர்” என்று கூறினார். இவ்வாறு அவர்களோடு பேசிய பின்பு ஆண்டவர் இயேசு விண்ணேற்றமடைந்து கடவுளின் வலப்புறம் அமர்ந்தார். அவர்கள் புறப்பட்டுச் சென்று எங்கும் நற்செய்தியைப் பறைசாற்றினர். ஆண்டவரும் உடனிருந்து செயல்பட்டு, நிகழ்ந்த அரும் அடையாளங்களால் அவர்களுடைய வார்த்தையை உறுதிப் படுத்தினர்.

**தியானம்:** நோய் என்பது கடவுளின் சினம் மற்றும் சாபத்தின் அடையாளம் என்பது பழைய ஏற்பாட்டுப் படிப்பினை. நோய்வாய்ப்பட்ட மனிதர்கள் கடவுளால் தண்டிக்கப்பட்டவர்கள் மேலும் கடவுளால் வெறுக்கப்பட்டவர்கள் என்ற கருத்தும் நிலவிய காலத்தில் இறைமகன் இயேசு தன்னுடைய முதன்மையான பணியாக செய்தது இறைவன் உங்களையும் அன்பு செய்கின்றார் என்ற நற்செய்தியை அறிவித்து, சாதாரண சாமானிய மக்களிடம் காணப்பட்ட நோய்களையும், அசுத்த ஆவிகளையும் விரட்டி குணப்படுத்தியது. “கடவுள் நாசரேத்து இயேசுவின் மேல் தூய ஆவியின் வல்லமையைப் பொழிந்தருளினார். கடவுள் அவரோடு இருந்ததால் அலகையின் கொடுமைக்கு உட்பட்டிருந்த அனைவரையும் அவர் விடுவித்து எங்கும் நன்மை செய்து கொண்டே சென்றார்” (தி.ப.10:38). மதபோதகர்களால் பாவிகள் என்று கருதப்பட்ட இந்த நோயாளர்களையும், பேய்பிடித்தவர்களையும் தேடித்தான் இயேசு வந்ததாக கூறுகின்றார். “நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை, நேர்மையாளரை அல்ல, பாவிகளையே அழைக்க வந்தேன்” (மத்.9:12,13). பாவத்தை வெறுத்த இயேசு ஒருபோதும் பாவிகளை வெறுக்கவில்லை. சமூக, சமய, பொருளாதார, அரசியல், பண்பாட்டு சூழல்களினால் பாதிக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்ட ஒதுக்கப்பட்ட மக்களுக்கு அகவிடுதலையையும், புறவிடுதலையையும் தருவதே நம் ஆண்டவர் இயேசுவின் முதன்மையான பணி. எனவேதான் ஆயனில்லா ஆடுகள் போல் அலைக்களிக்கப்பட்ட மக்களுக்கு கடவுளின் அன்பையும் அவரது இரக்கத்தையும் நற்செய்தியாக அறிவித்து குணப்படுத்துகின்ற வல்லமையால் அதனை நிரூபித்துக் காண்பிக்கின்றார். “அவர்கள்மீது பரிவுகொண்டார் அவர்களிடையே உடல் நலமற்றிருந்தோரைக் குணமாக்கினார்” (மத் 14:14). இரவும் பகலும் தனிமையில் ஜெபித்து தந்தையின் அன்பைச் சுவைத்த இறைவன் அதே அன்பை நற்செய்தியாக அறிவித்து, குணப்படுத்துதல் வழியாக, பேய்களை ஓட்டுவதன் வழியாக மக்களுக்கு எண்பித்துக் காண்பிக்கின்றார். இன்றைய மனோவியலாளர்கள் கருத்துப்படி 80 சதவீதமான நோய்களுக்கு அடிப்படைக்காரணமாக அமைவது அவர்களுடைய மனம். உலகத்தின் கவலைகளுக்கும், பயங்களுக்கும், குற்றமனசாட்சிக்கும் ஆளான மனதே பல்வேறு நோய்களுக்கு அடிப்படைக்காரணம் என்று அறிவியல் அறிஞர்கள் நிரூபித்திருக்கிறார்கள். இயேசுவின் அன்பு இன்றும் நமக்கு விடுதலைகொடுத்து நம்மை பயங்களிலிருந்தும், குற்ற மனசாட்சிகளிலிருந்தும், தீமையின் ஆதிக்கங்களிலிருந்தும் விடுவிக்கின்றது. ஏனெனில் இயேசு இன்றும் நம்மத்தியிலே நம்மோடு வாழ்ந்துகொண்டிருக்கின்றார்.